தேதி.25.11.2025

சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்

O.S. No. 12/2020 திருமதி.சித்ரமதி, க/பெ.மயில்சாமி வா.சா.2

வா.சா.2: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் எது வரை படித்துள்ளேன் என்றால் B.Sc., படித்துள்ளேன். எனக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் எழுதப்படிக்க தெரியும். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் வீட்டில் இருந்து வருகிறேன். எனக்கு திருமணம் 2022ல் நடந்தது. எனது திருமணத்திற்கு முன்பு நான் எங்கும் வேலைக்கு செல்லவில்லை என்றால் சென்றேன். கோயம்புத்தூரில் உள்ள அக்ரோ கிரின் பையோ லைட் கம்பெனியில் வேலை செய்தேன். மேற்படி கம்பெனியில் ஒப்பந்தத்தின் அடிப்படையில் வேலை செய்தேன் என்றால் இல்லை. நான் இவ்வழக்கின் 5ம் வாதி என்றால் சரிதான். என்ன பரிகாரங்கள் கேட்ட இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். யார் பெயரில் இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் பிரதிவாதி வெங்கிட்டம்மாளின் மீது போடப்பட்டுள்ளது. பிரதிவாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் என்னுடைய அத்தை ஆவார். பிரதிவாதிக்கு என்ன வயது என்றால் சுமார் 85 வயது இருக்கும். பிரதிவாதியால் தற்போது தனியாக எங்கும் நடமாட முடியாது என்றும், பிறருடைய உதவியுடன் தான் வரமுடியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3ல் ஐந்தாவதாக உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள சங்கதிகள் எல்லாம் சரியானவை என்றால் நான் கையெழுத்து இடும்போது படித்துப்பார்க்கவில்லை.

நான் பொதுவாக ஒரு ஆவணத்தில் கையெழுத்து செய்யும் போது அதன் விவரங்களை படித்துப்பார்த்து சரியாக இருந்தால் தான் கையெழுத்து செய்வேன் என்றால் பல அனுபவத்திற்கு பின் தான் நான் அவ்வாறு படித்து பார்த்து கையெழுத்து செய்வேன். நான் எங்கு கையெழுத்து செய்தாலும் படித்துப்பார்த்து தான் கையெழுத்து செய்வேன் என்றால் படித்துப்பார்த்து தான் கையெழுத்து செய்வேன். தவறாக இருந்தால் கையெழுத்து செய்யமாட்டேன் என்றால் சரிதான். என்னுடன் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் ஒரு அக்கா, தம்பி ஆகியோர்கள் உள்ளார்கள். அவர்கள் இவ்வழக்கின் வாதிகள் என்றால் சரிதான். எனது தந்தை மற்றும் தாயார் சொன்னால் கையெழுத்து செய்வேன் என்றால் சரிதான். எந்த ஆவணத்தில் கையெழுத்து செய்ய சொன்னாலும் செய்வேன் என்றால் சரிதான். எனது தந்தை மற்றம் தாயார் எனது நலனுக்கு எதிராக எதையும் செய்ய மாட்டார்கள் என்றால் சரிதான். அதனால் 01.02.2017ம் தேதியிட்ட வா.சா.ஆ.3ஐ எனது தந்தை, தாயார், எனது அக்கா, தம்பி, நான் ஆகியோர்கள் சேர்ந்து ஒரு கிரையம் எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக எத்தனை வழக்குகள் உள்ளது என்றால் இந்த வழக்கு மற்றும் மற்றொரு வழக்கு உள்ளது. இந்த நீதிமன்றத்தில் இவ்வழக்கும், சத்தியமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.204/2019 என்ற வழக்கும், கோபிசெட்டிபாளையம் மாண்பமை கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.17/2013 என்ற வழக்கும் உள்ளது. மேற்படி மூன்று வழக்குகள் சம்பந்தப்பட்ட விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் எனது அப்பா நடத்தி வந்தார் அதனால் தெரியும். இவ்வழக்கில் நான் ஒரு வாதியாக இருந்தாலும் எனது அப்பா

சொல்லி தான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் எதனால் ஏற்பட்டது என்றால் தாவா சொத்தை வெங்கிட்டம்மாள் கடனுக்காக வாங்குவதாக சொல்லி எனது தந்தை குமாரிடமிருந்து வாங்கிவிட்டு பின்னாளில் எனது தந்தை குமார் கொண்டத்து கவுண்டரின் பெயரில் சொத்து உள்ளதால் அதையே வைத்துக்கொள்ளுமாறு கூறியதால் எனது தந்தை அதை மறுத்து தாவா சொத்து தான் வேண்டுமென்றுசொல்லி, பின்னாளில் கொண்டத்து கவுண்டரின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். எனவே முதலில் அந்த சொத்து வேண்டாமென்று மறுத்துவிட்டு கொண்டத்து கவுண்டர் சொத்தை கேட்டதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் மேற்சொன்ன சங்கதிகள் எதுவும் எனது வழக்குரையிலோ, பிரமான வாக்குமூலத்திலோ சொல்லிவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆன கிரையப்பத்திரத்தில் முத்துச்சாமி கவுண்டரிடம் கொண்டத்து கவுண்டர் வாங்கிய கடனுக்காக நான் எனது குடும்பத்தார் எல்லோரும் சேர்ந்து கிரையம் செய்து கொடுத்துள்ளதாக கண்டு ஆவணத்தில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3ல் உள்ள சொத்து எனது தாயார் பெயரில் உள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின்படி பாத்தியப்பட்டு வாரிசுகள் என்ற முறையில் நானும் மற்ற வாதிகளும் கூட்டாக சேர்ந்து கிரையம் கொடுத்துள்ளோம் என்று கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3ல் ரூ.6,35,000/-க்கு முத்துசாமி கவுண்டரிடம் பெறப்பட்ட கடனுக்காக தாங்கள் வஜா செய்து கொண்ட வகையில் எங்களுக்கு சரியாக செல்லாகிவிட்ட படியால் கீழ்க்கண்ட சொத்தை இன்றே தங்களுக்கு சுவாதீனம் செய்து

கொடுத்திருக்கிறோம் என்று ஆவணத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அவர்கள் எங்களுக்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை. வா.சா.ஆ.3ல் கீழ்கண்ட சொத்தைக்குறித்து எங்களுக்கும், எங்களுடைய வாரிசுகளும் எந்த விதமான பாத்திய சம்பந்தம் பின் தொடர்ச்சி கிடையாது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அவர்கள் சொன்னபடி நடக்கவில்லை. எனது தாத்தா கொண்டத்து கவுண்டர் வாங்கிய கடனுக்காக நாங்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டு வா.சா.ஆ.3ஆவணத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3ல் உள்ள சங்கதிகளை படித்துப்பார்த்து அவைகள் உண்மை என்று தெரிந்து தான் கையெழுத்து செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் தற்போது இவ்வழக்கிற்காக படித்துப்பார்க்காமல் கையெழுத்து செய்துவிட்டேன் என்று பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி தன் தந்தை கொண்டத்துக்கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை கோபிசெட்டிபாளையம் கூடுதல் மாவட்ட நீதிமன்ற அ.வ.எண்.17/2018ல் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கில் பாகம் பிரித்துக்கொண்டு வேண்டும் என்று தீர்ப்பு ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு நிலுவையில் உள்ளது. மேற்படி அ.வ.எண்.17/2018 வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு தான் நான், எனது குடும்பத்தார் அனைவரும் ஒன்று சேர்ந்து மேற்படி வழக்கின் பயனை பிரதிவாதி அடையக்கூடாது என்பதற்காக வா.சா.ஆ.3 ஆவணத்தை செல்லாது என்று 2020ம் ஆண்டில் இந்நீதிமன்றத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.3 ஆவணத்தை கட்டாப்படுத்தி வாங்கிவிட்டார்கள் என்று நான் காவல்

துறையினரிடம் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. எனது அப்பா பெயரில் குற்றவியல் புகார் ஏதேனும் உள்ளதா என்றால் உள்ளது. எனது தந்தை ஆள்மாறாட்டம் செய்து கிரையம் செய்தது தொடர்பாக பவானிசாகர் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு மேற்படி குற்றவியல் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அதனால் 01.07.2017ம் தேதியில் நான் எனது குடும்பத்தாரும் சேர்ந்து எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.3 ஆவணம் உண்மையான ஆவணம் என்றும், நாங்கள் அதை செல்லாது என்று பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. நான் கிரையம் செய்து கொடுத்துவிட்டு தற்போது வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் கண்டுள்ள சங்கதிகளை படித்துப்பார்த்து ஒப்புக்கொண்டு ஒவ்வொரு பக்கத்திலும் கையெழுத்து செய்துவிட்டு தற்போது இவ்வழக்கிற்காக பொய்யான சங்கதிகளைக்கொண்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி எதாவது ஒரு வகையில் சிரமத்திற்கு ஏற்படுத்தவேண்டும் என்று நாங்கள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3ல் உள்ள சொத்துக்கு 1976ம் ஆண்டில் எனது பாட்டி ராஜம்மாள் பெயரில் சின்னச்சாமி கவுண்டர் தண்ணீர் எடுத்தச்செல்வதை தடுக்கக்கூடாது என்று ஒரு தடைஉத்திரவு பெறப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள எனது பிரமான வாக்குமூலத்தில் " .... என்னுடைய தந்தையின் தாத்தாவின் ஒரே மகனான சின்னுச்சாமிக்கவுண்டர் இறந்துவிட்டதால் அவரது மனைவியான பிரதிவாதி ..... " என்று சொல்லியுள்ளது சரியா தவறா என்றால் சரிதான். என் தந்தையின் தாத்தாவிற்கு

சின்னுச்சாமி கவுண்டர் ஒரே மகன் என்று நான் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. சின்னுச்சாமி கவுண்டர் ஒரே மகன் தான் மற்றும் எழு மகள்கள் உள்ளார்கள். சின்னுச்சாமி கவுண்டர் எனது தாத்தா கொண்டத்துகவுண்டருக்கு மருமகன் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணமானது உண்மையான கடனுக்காக எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணம் என்றும், தற்போது நிர்பந்தம் செய்து எழுதி வாங்கிக்கொண்டார்கள் என்று நான் சொல்லும் சாட்சியத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. எனவே மேற்படி வழக்கானது செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.